2. தகவல் கோரல்

(அ) அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது என்ன, இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி. திரு. துரைமுருகன் சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.*

திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர், அரசு ஊழியர்கள் சங்கங்களுடைய கூட்டுக் குழு, கடந்த 23-10-2002 முதல் தமிழ்நாட்டில் ஒரு போராட்டத்தை நடத்தி வருவதைத் தாங்களும் நன்றாக அறிவீர்கள். பெரும்பாலோர் அதில் ஈடுபட்டு அலுவலகங்களுக்குச் செல்லமுடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. நாட்டில் பல போராட்டங்களும் நடைபெறுகிறபோது, இந்தப் போராட்டமும் நடைபெறுகிற காரணத்தால், பொதுவாக தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. அலுவலகங்களும் மூடப்பட்டிருப்பதால் அரசு நிர்வாகமே ஸ்தம்பிக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதுகுறித்து உடனடியாகப் பேசி, அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக எதிர்க்கட்சிகளின் சார்பில் அவையை ஒத்திவைக்கவேண்டும் என்னும் தீர்மானத்தைத் தங்களிடம் தந்திருக்கிறோம். எனவே, அதிமுக்கியத்துவம் வாய்ந்த, அவசரம் வாய்ந்த, நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கிற, அரசாங்கத்திற்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையில் அதை எடுத்த பிறகுதான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அரசுத் தரப்பிலிருந்து கேட்டு, பதில் வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி இங்கு பேசலாம். வருகிற திங்கள்கிழமைக்குமேல் ஒவ்வொன்றாக அவையில் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.*

[2002 அக்டோபர் 25

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..(குறுக்கீடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தினாலே மக்கள் பாதிக்கப்படுகிற...

திரு. ஜி.கே. மணி: இதுவரையிலே எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் பரவலாக எல்லாத் தரப்பு மக்களிடையேயும் அவர்கள் ஒரு போராட்டத்தில் ஈடுபடக்கூடிய ஓர் உணர்வின் அடிப்படையில் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, நீங்கள் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். திங்கள்கிழமைக்குமேல், அரசுத் தரப்பிலிருந்து பதில் வந்ததும், நாம் பேசி ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து 3 நாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையே நேற்றுதானே கூடியது, உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விலை உயர்வினால் கடுமையான பாதிப்பு; மதமாற்றத் தடைச் சட்டத்தை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, சட்டமன்றத்திற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான், நான் ஒப்புக்கொள்கிறேன். சட்டமன்ற நடைமுறைப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ, அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பாகவோ எடுத்துக்கொள்வதைப் பற்றி அரசுத் தரப்பிலிருந்து பதிலைக் கேட்டு, திங்கள்கிழமைக்குமேல் அவற்றின் முக்கியத்துவம் கருதி ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உடனடியாக எப்படி பதில் சொல்லமுடியும்? உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2002 அக்டோபர் 25]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர், அரசு ஊழியர்களின் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு, அதாவது JACTTEO-GEO என்ற அமைப்பின் பிரதிநிதிகள், என்னைச் சந்திக்க வேண்டுமென்று நேரம் ஒதுக்குமாறு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களைச் சந்தித்தபிறகு, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்போது அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. அ. பாப்பா சுந்தரம்
2. டாக்டர் தே. குமாரதாஸ்
3. திரு. லா. சந்தானம்
4. திரு. அ. அன்வர் ராஜா
5. திரு. சி. சிவசாமி
6. திரு. வி. ஜெயராமன்

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS